## கொரோனா நோய்த்தொற்று நெருக்கடிவேளையில்

## திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு அளித்த சிறப்புச் செபம்

# அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

ஓ! இறைவனின் புனித அன்னையே! உம்முடைய பாதுகாவலில்
நாங்கள் தஞ்சம் அடைகிறோம். துயர்மிக்க இன்றைய சூழ்நிலையில்,
ஒட்டுமொத்த உலகமும் துன்பத்திற்கும் கவலைக்கும்
இரையாக்கப்படுகிறபோது, இறைவனின் தாயே, எம் அன்னையே!
உமது பாதுகாவலில் நாங்கள் அடைக்கலம் தேடுகிறோம்.

கன்னி மரியே! கொரோனோ வைரஸ் நோய்த்தொற்றுக்கு நடுவில்
உம்முடைய கருணைமிக்க கண்களை எம்மீது திருப்பியருளும்.
மிகுந்த கலக்கமடைந்துள்ளவர்களையும்
தாங்கள் மிகவும் அன்பு செய்தவர்களைப் பறிகொடுத்தும்
அதே நேரம் அவர்களை மிகவும் பாதிக்கும்வகையில்
அடக்கம் செய்து, மிகுந்த கலக்கமடைந்து,
அழுது புலம்புபவர்களைத் தேற்றியருளும்.
தாங்கள் நேசிப்பவர்கள் நோய்வாய்பட்டிருக்கிறபோது,
நோய்த்தொற்று பரவாமல் இருப்பதைத் தடுக்கும்பொருட்டு,
அவர்களுக்கு அருகே இருக்கமுடியாமல்
கவலையில் தோய்ந்திருப்பவர்களுக்கு அருகில் நீரே இருந்தருளும்.
எதிர்காலம் பற்றிய நிச்சயமின்மையாலும்
பொருளாதாரப் பின்னடைவு மற்றும் வேலையின்மை ஆகியவற்றின்
விளைவுகளாலும் துன்பத்திற்குள்ளாகியிருப்போரை
நம்பிக்கையால் நிரப்பியருளும்.

இறைவனின் தாயே! எம்முடைய அன்னையே! இந்தப் பெருந்துன்பம் முடிவுக்கு
வரவும் நம்பிக்கையும் நிம்மதியும் புத்தம் புதிதாய் விடியவும்
எமக்காக இரக்கத்தின் தந்தையாம் இறைவனிடம் மன்றாடும். கானாவில் நீர்
செய்ததுபோல, உம்முடைய இறைமகனிடம் எடுத்துக்கூறி முறையிட்டருளும்.
இதனால், நோயாளிகளின் குடும்பங்களும்
பலியானவர்களின் குடும்பங்களும் தேற்றப்படட்டும்; அவர்களுடைய
இதயங்கள் நம்பிக்கைக்கும் பற்றுறுதிக்கும் திறக்கப்படட்டும்.

இந்த அவசரகாலத்தின்போது முதல்வரிசையில் நின்றுப் போராடும்
மருத்துவர்களையும் செவிலியர்களையும் தூய்மைப் பணியாளர்களையும்
தன்னார்வலர்களையும் மேலும் பிறரைப் பாதுகாக்க
தங்கள் வாழ்வைப் பொருட்படுத்தாமல் துணிபவர்களையும் பாதுகாத்தருளும்.
அவர்களுடைய துணிச்சல்மிக்க முயற்சியை ஆதரித்து, அவர்களுக்கு
வலிமையையும் தாராள உள்ளத்தையும் தொடர் உடல்நலத்தையும் அளித்தருளும்.

பகலிலும் இரவிலும் நோயாளிகளுக்கு அருகிலிருந்து உதவி
செய்பவர்களுக்கும் மேய்ப்புப்பணியில் கொண்டிருக்கும் ஆர்வத்தாலும்
நற்செய்திக்கு உண்மையாக இருப்பதாலும் ஒவ்வொருவரையும் ஆதரித்து
அரவணைத்து உதவி செய்ய முயற்சிக்கும்
அருள்பணியாளர்களுக்கும் அருகில் இருந்தருளும். (தொடர்ச்சி...)

வாழ்வின் அடிப்படைத் தேவைகளின்றி துன்புறுவோருக்கு உதவிட முன்வரவும், தெலைநோக்குப்பார்வையாலும் தோழமையுணர்வாலும் தூண்டப்பட்டு, நல்ல சமூக மற்றும் பொருளாதார தீர்வுகளைத் திட்டமிடுவதற்கு ஞானம், உள்ளார்ந்த அக்கறை மற்றும் தாரள மனப்பான்மை ஆகியவற்றுடன் நாட்டுத் தலைவர்களை ஆதரித்தருளும்.

மிகவும் புனிதம் நிறைந்த மரியே, ஆயுதங்களைப் பெருக்குவதற்காகவும் சேமித்து வைப்பதற்காகவும் மிகப்பெரிய தொகையை முதலீடு செய்வதற்குப் பதிலாக, எதிர்காலத்தில் இதுமாதிரியான துன்பியல் சம்பவங்களைத் தடுப்பது எப்படி? என்பதற்கு நற்பயன் அளிக்கக்கூடிய ஆராய்ச்சியை வளர்த்தெடுப்பதற்கும் செலவுச் செய்யப்படுவதற்கும் எம்முடைய மனசாட்சியைத் தூண்டிவிடும்.



அன்புத் தாயே! ‘நாங்கள் அனைவரும் மிகப் பெரிய குடும்பத்தின் உறுப்பினர்களே’ என்பதை உணர்ந்திடவும் எம்மை இணைக்கும் இந்த உறவை அங்கீகரிப்பதற்கும் எமக்கு உதவியருளும். இதனால் சகோதரத்துவம் மற்றும் தோழமை உணர்வில், எண்ணிறந்த ஏழ்மை மற்றும் நெருக்கடி சூழ்நிலைகளைக் குறைக்கவும் மட்டுப்படுத்தவும் நாங்கள் உதவ முடியும். இறைநம்பிக்கையில் உறுதியாக இருக்கவும் தொண்டாற்றுவதில் விடாமுயற்சியுடன் செயலாற்றவும் செபத்தில் நிலைத்திருக்கவும் எம்மைத் தயார்படுத்தும்.

துயருறுவோரின் ஆறுதலே! அன்னை மரியே! துன்பத்தில் வாடும் உம் பிள்ளைகள் அனைவரையும் அரவணைத் தருளும். எங்கள் வாழ்க்கை இயல்புநிலைக்கு திரும்பும் வண்ணம், இறைவன் தம் வல்லமையான கரத்தை நீட்டி, இந்தப் பயங்கரமான நோய்த்தொற்றிலிருந்து எம்மை விடுவிக்க மன்றாடியருளும்.ஆமென்.

எம் பயணத்தில் மீட்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக நீர் எப்போதும் ஒளிர்கின்ற, உம்மிடம் எம்மையே ஒப்படைக்கிறோம். கருணையின் உருவே, தாய்மையின் கனிவே, இனிமைத் தருவே, கன்னி மரியே! ஆமென்.

**(தமிழாக்கம்: குடந்தை ஞானி, நம்வாழ்வு – ஆசிரியர்)**

**www.namvazhvu.in**

**நம் வாழ்வு**

**ஒரே கிறிஸ்தவ வார இதழ்**

**ஆண்டுச் சந்தா ரூ.500**

**நம் வாழ்வு வார இதழின் சந்தாதாரராகிடுங்கள்**